**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026 ம் ஆண்டு  பிப்ரவரி மாதம் 3-ம் நாள்**
**STC.166/2025**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் திரு.த.யுவராஜ் அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| Case No. | STC. No 166/2025 |
| Depostition of Witness  for Complainant | PW1(Cross) |
| Name : | திரு.காந்தி |
| Father’s / Husband Name : | த.பெ. முத்துக்கண்ணு |
| Village : | |
| Taluk : | |
| Age : | 48 |

Accused present  with counsel

**சாட்சியின் குறுக்கு விசாரணை :**

வில்லியநல்லூரைச் சேர்ந்த கலியமூர்த்தி மகன் சிவசுப்ரமணியனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இன்று அந்த சிவசுப்ரமணியன் வேறொரு வழக்கிற்காக இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். சிவசுப்ரமணியனுக்கு சொந்தமான சிவா காம்ளக்ஸ்க்கு அருகில் உள்ள கடையில் நான் கோழி கறி வியாபாரம் செய்கிறேன், நான் வியாபாரம் செய்யும் இடம் சிவசுப்ரமணியனுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. என்னுடைய அலைபேசி எண் என்ன என்றால் 8973448729. எனக்கும் எதிரி ஷண்முக சுந்தரந்திற்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும் எதிரிக்கும் சிவசுப்ரமணியனுக்கும் தான் பணம் கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றாலும் சிவசுப்ரமணியனுக்காக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும்  எத்தனை வருடமாக  பழக்கம் என்றால் 2024ம் ஆண்டிலிருந்து எனக்கும் எதிரி ஷண்முக சுந்தரத்திற்கும் பழக்கம். எதிரி எவ்வாறு பழக்கம் என்றால் அவர் வில்லியநல்லூரில் பெண் எடுத்து கல்யாணம் செய்துள்ளார். தேவகிருஷ்ணன் என்பவருக்கும் எதிரிக்கும் பழக்கம், தேவகிருஷ்ணன் எனக்கும் பழக்கம் என்பதால் எதிரியுடன் பழக்கம் ஏற்பட்டது.

எனக்கு சொந்தமாக எவ்வளவு ஏக்கர் நிலம் உள்ளது என்றால் 3 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. எனக்கு சொந்தமாக 3 ஏக்கர் புன்செய் நிலம் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. நான் கோழிப்பண்ணை தொழில் செய்து வருகிறேன். கோழிப்பண்ணை தொழில் மூலமாக எவ்வளவு ஆண்டு வருமானம் வரும் என்றால் சுமார் 15 இலட்சம் வரும். அரசாங்கத்திற்கு வருமான வரி

கணக்கு காட்டி செலுத்துகிறேனா என்றால் இல்லை. எனக்கு சொந்தமாக கோழிப்பண்ணை இல்லை என்றாலும் அதன்மூலமாக 15 இலட்சம் வருமானம் வரும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி எத்தனை முறை என்னிடம் பணம் கேட்டு வந்தார் என்றால் தேவகிருஷ்ணன் மூலமாக பணம் தேவைப்படுவதாக கேட்டுவந்தார், என்னிடம் 2 முறை பணம் கேட்டு வந்திருக்கிறார்.

எதிரி என்ன வேலை செய்கிறார் என்பது தெரியுமா என்றால் ஆசிரியராக வேலை செய்கிறார்.2024 செப்டம்பர் மாதத்தில் எதிரி எந்த இடத்தில் ஆசிரியராக வேலை செய்தார் என்றால் சி.முட்லூரில் உள்ள ஒரு பள்ளியில் வேலை செய்தார். சி.முட்லூரில் உள்ள பள்ளியில் எதிரி ஆசிரியராக இருந்ததை நான் நேரடியாக சென்று பார்த்துள்ளேனா என்றால் இல்லை. கடன் கொடுத்ததாக சொல்லும் 06.10.2024-ம் தேதியிலாவது எதிரி எங்கு வேலை பார்க்கிறார் என்று போய் பார்த்தேனா என்றால் இல்லை. எதிரிக்கு கடன்கொடுக்கும்போது அதற்கு ஆதாரமாக கடனுறுதி சீட்டு அல்லது பத்திரம் ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. எதிரிக்கு வட்டிக்காக இல்லாமல் கைமாற்றாக தான் கடனை கொடுத்தேனா என்றால் ஆமாம், 3 மாதத்தில் திருப்பி கொடுத்துவிடுவதாக சொன்னதால் கைமாற்றாக கொடுத்தேன். 3 மாதத்திற்கு பிறகு எதிரியிடம் பணத்தை திரும்ப கேட்டேனா என்றால் 3 மாதத்திற்கு உள்ளாகவே சென்று கேட்டேன். நேரடியாக கேட்டேனா அல்லது போன் மூலமாக கேட்டேனா என்றால் நேரடியாக கேட்டேன். எங்கு வைத்து கேட்டேன் என்றால் பி.முட்லூரில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டேன். 06.10.2024-ஆம் தேதிக்கு பிறகு எதிரியை பி.முட்லூரில் சந்தித்து பணம் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அந்த காலக்கட்டத்தில் எதிரி பி.முட்லூரில் வசிக்கவே இல்லை என்றாலும் சரியல்ல.

நான் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரி என்னிடம் காசோலை கொடுக்கும்போது யார் உடன் இருந்தது என்றால் தேவகிருஷ்ணன் இருந்தார். வழக்கு காசோலையில் உள்ள தொகை, தேதி, என்னுடைய பெயர் போன்ற விபரங்களை யார் எழுதியது என்றால் தேவகிருஷ்ணன் தான் எழுதினார். வழக்கு காசோலையை கொடுக்கும்போது தேவகிருஷ்ணன் உடனிருக்கவில்லை என்றாலும் காசோலையில் உள்ள தொகை தேதி, என்னுடைய பெயர் போன்ற விபரங்களை தேவகிருஷ்ணன் பூர்த்தி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. காசோலை திருப்பப்பட்ட உடன் காசோலை தொகையை எதிரியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். எவ்வாறு கேட்டேன் என்றால் போன் மூலமாக தொடர்பு கொண்டு கேட்டேன். எதிரியின் செல்போன் எண்ணை சொல்லமுடியுமா என்றால் 9676370015. எத்தனை முறை கேட்டேன் என்றால் ஒரே முறை கேட்டேன். நான் எதிரிக்கு போன் call செய்து கேட்டதற்கு ஆவணத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எதிரிக்கு call செய்து எந்த தொகையையும் கேட்கவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

எதிரிக்கு காசோலை தொகை தரவேண்டி வழக்கறிஞர் அறிவிப்பினை யார் மூலமாக அனுப்பினேன் என்றால் வழக்கறிஞர் ஆனந்தன் மூலமாக அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பிலுள்ள விபரங்களை நான் வழக்கறிஞரிடம் சொல்லவில்லை என்றாலும் சிவசுப்ரமணியன் தான் சொன்னார் என்றாலும் சரியல்ல. நான் தான் சொன்னேன். வழக்கறிஞர் அறிவிப்பில் என்னிடம் கையொப்பம் பெறப்பட்டதா என்றால் பெறப்பட்டது. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பிறகு எதிரியை நேரடியாக சந்தித்தேனா என்றால் இல்லை. எதிரி பொள்ளாட்சி சென்றுவிட்டார். எதிரியை பொள்ளாட்சிக்கு சென்று நான் சந்தித்தேனா என்றால் இல்லை. தேவகிருஷ்ணன் சென்று சந்தித்தார். எதிரியின் தந்தை சமீபத்தில் இறந்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி

எப்போது அவரது வீட்டிற்கு கிரகப்பிரவேசம் செய்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்னிடம் எந்த தொகையையும் கடனாக பெறவில்லை என்றாலும் அதற்காக காசோலை எதுவும் எழுதி தரவில்லை என்றாலும் பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சிவசுப்ரமணியன் த.பெ. கலியமூர்த்தி என்பவருக்காக எதிரியின் மீது நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு என் பணத்தை தான் கொடுத்தேன். எதிரி சட்டப்படியாக எனக்கு கடன் தொகையை திருப்பி கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**